ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்
SENIOR TAMILS' CENTRE OF ONTARIO

SANGANATHAM
சங்கநாதம்

May 2025
39-3

## தலைவரிடமிருந்து



ஏப்ரல் மாதம் 13ம் திகதி 4:59 மணிக்கு தமிழ்ப் புத்தாண்டு "விசுவாசு" பிறந்தது. இப்புத்தாண்டை நம் மன்ற உறுப்பினர்கள் மிகவும் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தோம். தமிழர்கள் வருட த்தை சுவாத்திய அடிப்படையில் ஆறு பருவ காலங்களாகப் பிரித்தார்கள். அந்த அடிப்படையில் தமிழ் புத்தாண்டு இளவேனில் காலத்தில் உதிக்கிறது. இளவேனில் காலத்தில் சூரிய வெப்பம் மற்றும் புளுக்கம் குறைவாகவும், ஆனால் பிரகாசம் அதிகமாக் காணப்படும். இப்பருவ காலத்தில் தென்றல் காற்று வீசும். இளவேனில் கால தென்றல் காற்றின் சுகத்தை திருநாவுக்கரசு நாயனார் இறை இன்பத்திற்கு ஒப்பிடுகிறார்: திருநாவுக்கரசு நயனாரை துன்புறுத்துவதற்காக சமணர்கள் அவரை சுண்ணாம்பு நீற்றறையில் இட்டபோது அவருக்கு இறைவன் அருளால் எவ்வித வாதையோ துன்பமோ ஏற்படவில்லை. இதமாக அவர் அனுபவித்த இறை இன்பத்தை இளவேனில் காலத்து சுகத்துக்கு இணையாக இப்படிப்பாடுகிறார்:

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே

இளவேனில் காலத்தில் பூக்கும் தமிழ் புத்தாண்டின் சுகத்தை வருடம் முழுவதும் முது தமிழர் மன்ற உறவுகள் அனுபவிக்க மனதார வாழ்த்துகிறேன்.

தமிழ்ப் புத்தாண்டு மட்டுமா நம் மன்றம் கொண்டாடி மகிழ்கிறது? புத்தாண்டைத் தொடர்ந்து யேசு பிரானின் உயிர்பு விழாவையும் ஏப்ரல் 25ல் மிகவும் சிறப்பாக ;யேசுவின் போதனைகள் மத எல்லைகளுக்கு அப்பால் மொத்தமாக மனிதகுலத்திற்குப் பொதுமறையாக வளங்கப்பட்ட நற்செய்தி என்பதை மனதார உணர்ந்து அர்த்த பூர்வமாக கொண்டாடினோம்: நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட சிலுவயை நாம் சுமந்தபின் நிட்சயம் மீட்புண்டு என்பதை யேசுவின் உயிர்ப்பு உறுதிப்படுத்துகிறது என்பதை போதகர் செல்வரட்ணம் அவர்கள் தெளிவாக உரைத்தார்.

மேற்கூறிய விழாக் கொண்டாட்டங்கள் மூலம் நம் மன்றத்தின் பிரதான நோக்கம் நிலைநிறுத்தப்படுகிறது: ஒன்றே குலம் ஒருவனே தெய்வம். இவ்விடயத்தில் நாம் நம் மன்றத்தின் செயற்பாடுகள் மூலம் தமிழ் உலகிற்கு முன்னோடியாக திகழ்வதையிட்டு நான் பெருமிதமடைகிறேன்.

நம் மன்றம் "மாணிக்கவிழா"வை வருகிற ஆங்கில ஆண்டில் கொண்டாடவிருக்கிறது . 40 வருட பயணத்தில் நம் மன்றத்தின் சாதனைகள் மலைபோன்றது என்பதை தமிழர் தகவல் அமைப்பு அங்கிகரித்து இவ்வாண்டுக்கான விருதை வழங்க்கியுள்ளது எம்மை மகிழ்ச்சிகொள்ளச் செய்கிறது. இந்த அங்கிகாரம் நம் தாயகம் வரை நமது பெருமையை வெளிப்படுத்தியுள்ளது நம்மை மேலும் உற்சாகப்படுத்துகிறது. இந்த உற்சாகத்தில் மாணிக்கவிழாவை நாம் எவ்வாறு உலகறிய கொண்டாடப்போகிறோம் என்பதை நாம் ஒருங்கிணைந்து திட்டமிடவேண்டும். இதற்கான ஆலோனையையும் ஆதரவையும் விழாகுழு உங்களிடம் நாடி நிற்கிறது. ஆகவே, ஊக்கமுடன் ஒன்றிணைவோம்; பாடுவோம் பாரறிய நம் மன்றின் புகழினை.

Manuel Jesudasan, Barrister, Solicitor & Notary Public --MJ LAW
T: 416 444 8070/ 647 501 6293

We often worry about minor things, letting our worries consume us like wildfire. But the truth is, most of these anxieties are insignificant issues in life. Imagine looking back in the future; you'll realize how much time and energy you wasted agonizing about trivial matters. Don't let that happen. Take a deep breath. Inhale, exhale and soak in the present moment. Because truth be told, it's all we have. Let go of the needless fretting and savor the sweetness of now. You'll thank yourself later for embracing this simple yet profound truth.

## Important Messages/முக்கிய அறிவித்தல்கள்

### Membership Renewal: Single membership $35

Membership for year 2025 could be done through e-transfer, cheques or visiting the STC office during weekdays between 9.30-3.30pm. E-transfer to be done at seniortamils@gmail.com

If you like to get the quarterly newsletters (Sanganatham) by post, please pay an additional $10 along with your membership. Membership receipts will be sent by email.

2025க்கான வருடாந்த சந்தாப்பணம் குறித்து நினைவூட்ட வேண்டிய தருணமிது. இந்த வருடத்துக்கான சந்தாப்பணத்தை தபால் மூலமோ, வங்கி பரிமாற்றம் மூலமோ (e-transfer) அல்லது வாரநாட்களில் மன்ற அலுவலகத்திலோ செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம். மேலும் சங்கநாதம் காலாண்டு இதழ்களை தபாலில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 10 டொலர்களை மேலதிகமாக செலுத்தி பெற முடியும். அங்கத்துவ பணத்திற்கான பற்றுச்சீட்டுக்கள் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

E transfer link: seniortamils@gmail.com

ஒன்ராறியோ முது தமிழர் மன்ற உறுப்பினர்களுக்கு இலவச சட்ட ஆலோசனையும் பின்வரும் விடயங்களுக்கு இலவச சட்ட சேவையும் பிரபல சட்டத்தரணி திரு மனுவேல் இயேசுதாசன் அவர்களால் வழங்கப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்:

- Power of Attorney
- Last Will
- Affidavits
- Certify copies.
- Any other matters that require humanitarian assistance.

மேற்கூறப்பட்ட சேவைகள் மாதத்தின் முதல் கிழமை வருகின்ற புதன் கிழமைகளில்காலை 11:மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரை ஒன்ராறியோ முது தமிழர் மன்றஅலுவலகத்தில் நடை பெறும்.

சேவை பெற விரும்புவோர் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். முற்பதிவு அவசியம். தொடர்புகளுக்கு தொலை பேசி இலக்கம்: 416-496-2897/416-496-8850



**Volunteer Appreciation Award presented to Senior Tamils' Centre of Ontario by Extendicare -25th April 2025**

**இதழ் ஆசிரியரின் பார்வையில்!**

எல்லா மூங்கிலும் புல்லாங்குழல் ஆவதில்லை
சிலருக்கு படகாகவும், சிலருக்கு ஏணியாகவும், சிலருக்கு வீடாகவும் மாறுகின்றன
அது போலத்தான் வாழ்க்கையும்

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளுக்கு என் இனிய சித்திரை புத்தாண்டு , ஈஸ்ரர் வாழ்த்துக்கள்!

முதலில் ஒரு வேண்டுகோளுடன் உங்களோடு நான் கை குலுக்க ஆசைப்படுகின்றேன். கை நிறைய நீங்கள் சுமந்திருக்கும் கவலைகளை கீழே இறக்கி வையுங்கள். அது கடவுளின் காலடியாக இருக்கலாம் அல்லது உங்களுக்குப் பிடித்த ஒரு இடமாக இருக்கலாம். தப்பில்லை. கைகழுவ கொஞ்சம் நீர் தருகிறேன். கழுத்தை முறிக்கும் கடந்த காலக் கஷ்டங்களை கீழே இறக்கி வையுங்கள். இப்போ மனசு கொஞ்சம் லேசாகி இருக்கும். நெஞ்சை நிமிர்த்தி நில்லுங்கள். சுதந்திரமாக சுவசியுங்கள். பிராண வாயுவை நுரையிரலின் ஒவ்வொரு அங்குலத்திலும் சேமியுங்கள். புன்னகைப் பூக்களை உதடுகளில் பூக்கவிடுங்கள். இன்று " புதிதாய் பிறந்தோம்", புதிதாய் பிறந்தோம்" என்கிற பாரதி வேத்தை பலமுறை பலமுறை பரவசமாக சொல்லுங்கள். உங்களுக்கு பிடித்தமான ஓர் தேநீர் தயாரித்து அனுபவித்து அருந்துங்கள். குடிக்காதீர்கள், விழுங்காதீர்கள், ஒவ்வொரு துளியோடும் அனுபவித்து அருந்தி வாழ்ந்து பாருங்கள். அப்போ தெரியும் வாழ்க்கையின் மகிழ்ச்சி, அருமை, ருசி.

தை பிறந்தால் வழி பிறக்கும். தை மாத்த்தில் தைப் பொங்கலும், மரபுதிங்களும் baba banquet hallல் மிக குதுகலமாக கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் இடம்பெற்ற நிகழ்சிகள் அனைத்தும் மிக நேர்த்தியாக திட்டமிடப்பட்டு நடைபெற்றது. பங்குபெற்ற அனைவரும் மிக அழகாகவும், திறமையாகவும் தங்கள் திறமையை வெளிப்படுதினார்கள். பாராட்டுக்கள்.

எமது மன்றத்தினால் நடத்தப்படும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் ஓர் தேநீர் அருந்துவது போல் ஒவ்வொரு துளியுடனும் வாழ்ந்து பாருங்கள். அப்போ அதன் ருசி தெரியும், ஓர் நிறைவை உணர்வீர்கள். உங்களின் நலத்திற்காகவும், சந்தோசத்திற்காகவுமே ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் யோசித்து திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றது.அதை ஏற்று அனுபவிப்பது உங்கள் கைகளில் தான் உள்ளது. சமீபகாலமாக வியாளக்கிழமைகளில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு நடத்தபடும் wellness program எல்லோராலும் விரும்பி வரவேற்கப்படும் ஓர் நிகழ்ச்சியாக இருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. அதில் Rhythm and fun, board games, recipe rebels, art and craft அத்துடன் crochet, knitting என பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொருவரும் தங்களுக்கு விரும்பியவற்றில் பங்கேற்று மிக நிறைவாக அந்த நாட்களை பிரயோசனப்படுத்துகிறார்கள். இந்த wellness program ல் இடம்பெறும் பயிற்சிகள் உடலுக்கு, மனதுக்கு, மூளைக்கு,ஆத்மாவிற்க்கு பல நன்மைகளை அளிக்கிறது. ஒவ்வொரு பயிற்சியும் முதியோருக்கு நன்மை பயக்கும் வித்த்தில் அமைப்பது என்றும் வரவேற்கத்தக்கது.

தமிழர் தகவல் எமது மன்றத்திற்க்கு வழங்கிய community service award 2025 எமது மன்றத்தின் வளர்ச்சியையும் அதன் அளப்பரிய சமூக சேவையையும் எல்லோருக்கும் பறை சாற்றி காட்டுகின்றது.வாழ்த்துக்கள்.உங்கள் அனைவரினதும் தன்னலம் கருதாத சேவை தொடரட்டும்.

நமது அகல ஆழத்தை ஆராயலாமா? உங்களை உங்களுக்குப் பிடிக்கிறதா? சகித்துக் கொள்ள முடியுமா? உங்கள் நடை உடை பாவனை ரசிக்கும்படியாக இருக்கிறதா? நீங்கள் சாப்பிடும்போது எட்ட இருந்து பார்த்தால் அழகாக இருக்குமா? உங்களால் மதிக்கதக்கவர் என்று நீங்கள் போட்ட பட்டியலில் உங்கள் பெயர் இருக்கிறதா? இருக்கிறது என்றால் முதலிடத்தில் உண்டா? நம்முடைய மதிக்கதக்கவர் பட்டியலில் நம் பெயர் இருந்தால்தான் ஊரும் உலகமும் நம்மைப் பாராட்டும். நம் நேசத்துக்குரியவராக நாம் இருந்தால்தான் நம்மை பிறர் நேசிக்க முடியும். சுயநேயம், சுயகெளரவம், சுயமான மதீப்பீடு உள்ளவர்கள் வாழ்வில் தோற்பதில்லை. இப்படி நம் வாழ்க்கை இல்லையென்றால் புதிய மாற்றத்திற்க்கு நாம் தயாராக வேண்டும். நம்முடைய மனம்தான் நம் வாழ்வின் நிர்ணய சக்தி. இன்ப துன்பங்களின் கர்பப்பை. வெற்றி, தோல்விகளின் விளைநிலம். மனம்தான் வழ்க்கை போராட்டத்துக்கான போர்கருவிகளின் பட்டறை, பாசறை, பள்ளியறை. வாழ்வின் ஒவ்வொருஅங்குலத்தையும் மனம்தான் செதுக்குகிறது.


"மனம் போல வாழ்வு", "மனம் போல மாங்கல்யம்" "மனம் இருந்தால் மார்க்கம் உண்டு" என்பவை மக்கள் பிரகடனம்.





நம்பிக்கை என்பது தொடக்கத்தில் ஒரு சின்ன செடி. அதை ஆரம்பத்தில் யார் வேண்டுமானாலும் வெட்டி விடலாம். அது ஆழமாக வளர்ந்து விட்டால்.... அகலமாக படர்ந்து விட்டால்.....நம்பிக்கை விருட்சத்தை எவராலும் விட்ட முடியாது. நமது நம்பிக்கைகள் வளர்ந்து கம்பீரமான விருட்சமாக நின்றால் எல்லோரும் எம்மை நிமிர்ந்து பார்ப்பார்கள்.
எனவே மீண்டும் சொல்கிறேன் எண்ணங்கள்தான் வாழ்வை நிர்ணயிக்கின்றன. உயர வேண்டும், உயர வேண்டும் என்கிற எண்ணம் உள்ளவர்கள்உயர்வது நிச்சயம்!

துவண்டு போகும் போதெல்லாம் நினைவில் கொள்
இதுவும் கடந்து போகும்

***ரதிமதி சபாநாதன்***

நாளைய வாழ்க்கையை சிறப்பாக மாற்றுவது இன்றைய சிந்தனைகளும் செயல்களும்தான்




| DAY | ACTIVITY/VENUE | TIME |
|---|---|---|
|   | ❖ இலக்கியச்சோலை –**Dr. Ravi Subramaniam** (zoom)<br>❖ **Games & Recreation**<br>Burrows Hall Community Centre-(1081 Progress Ave-Scarborough) | 7pm -8.30pm<br>9.30am-12 noon |
|   | ❖ **Gentle Fitness** ---Chair Yoga with Felecia<br>❖ **Beads jewellery making (STC office)**<br>3852 Finch Ave. E, # 210) Scarborough | 9.30am—10.30am<br>10.00am—12 noon |
|   | ❖ **Simply Yoga** -Yoga time with Sri Siva (zoom)<br>❖ **நிலா முற்றம் --Variety entertainment** (zoom) | 9.30am—10.30am<br>7pm -8.30pm |
|   | ❖ **Well- Being Warriors (wellness program)**<br>3852 Finch Ave. E, # 403, Scarborough<br>▪ **Rhythm and Fun**<br>▪ **Colorful Creations (Arts & Crafts)**<br>▪ **The Playful Place--Board games**<br>▪ **Recipe Rebels** | <br><br>10.00am-11.45am<br>10.00am-12 noon<br>10noon-2.30pm<br>11.45am-1.00pm |
|   | ❖ **Wellness Program**<br>Burrows Hall Community Centre<br>1081 Progress Ave-Scarborough | 9.30am-12 noon |




**Tamils' Information Community Service Award 2025** presented to Senior Tamils' Centre of Ontario in recognition of the magnificent services rendered by Seniors to Seniors within the Tamil community for the past 40 years with remarkable efficiency and altruism.

கனேடிய தமிழர்களின் தன்னார்வச் சேவை அமைப்புகளில் தனியான மதிப்பு பெற்று திகழும் ஒன்றாரியோ முதுதமிழர் மன்றத்துக்கு அதன் நாற்பதாவது ஆண்டுப்பணி காலத்தில் 2025 வருடத்திற்கான சமூகப்பணி சிறப்பு விருதை வழங்கி கௌரவிக்கிறது தமிழர் தகவல்.









Life is a journey. Today's moment becomes tomorrow's memory…… enjoy every moment, good or bad…… because the Gift of Life is Life itself.

May the source of hope, fill your heart with love and light, and may your day be filled with smiles, peace and blessings.

**"A calm mind brings inner strength and self-confidence, so that's very important for good health." – Dalai Lama**

**"You are never too old to set new goals or to dream a new dream." – C.S. Lewis**

## Senior Tamils' Centre of Ontario

# Empowering Seniors Through Cultural Engagement and Elder Abuse Prevention



As part of the New Horizons for Seniors 2025 funded project, we are launching a three-part seminar series aimed at empowering seniors through knowledge and awareness. The first seminar in this series will focus on fraud prevention and financial abuse, providing essential information to help seniors safeguard their assets and personal information.

This seminar is being organized in partnership with the Ontario Securities Commission, Toronto Police Services, and our in-house experts to educate participants on:

- ✔ Common fraud schemes and financial abuse tactics
- ✔ How to recognize and report fraud
- ✔ The role of artificial intelligence in scams
- ✔ Cyber frauds and online scams— how to stay protected
- ✔ Pre-planning strategies to mitigate risks

**Guest Speakers**

**Christine Allum**
Senior Advisor, Investor Engagement & Stakeholder Partnerships Ontario Securities Commission

**Guest speaker from the Toronto Police Services**

**In-House Experts**
Manuel Jesudasan – Barrister, Solicitor & Notary Public
Raj Thavaratnasingham – Retired Investment Advisor

# Financial Abuse

What It Is & How to Respond

**Workshop Series 1**

**Date & Time: Friday, June 6, 2025 | 9:30 AM – 12:30 PM**
**Venue: Burrows Hall Community Center**
**1081 Progress Ave. Scarborough**

New Horizons for Seniors Program

Funded by the Government of Canada's New Horizons for Seniors Program

Canada

## Senior Tamils' Centre of Ontario

# Empowering Seniors Through Cultural Engagement and Elder Abuse Prevention



As part of the New Horizons for Seniors 2025 funded project, we are launching a three-part seminar series aimed at empowering seniors through knowledge and awareness. The second seminar in this series will focus on Raising awareness about physical abuse which is crucial for prevention and support.

**Topics discussed:**

- ✓ What is physical abuse
- ✓ Recognizing the Signs
- ✓ Impact on Mental Health
- ✓ Legal Protections
- ✓ Support Systems
- ✓ Reporting Abuse

**Guest Speakers**

**Dr. Varagunan Mahadevan**
MD, CCFP, MBBS

**Manuel Jesudasan**
Barrister, Solicitor & Notary Public

**Guest speaker from the Toronto Police Services**

# PHYSICAL ABUSE

**Workshop Series 2**

**Date & Time: Friday, June 20, 2025 | 9:30 AM – 12:30 PM**
**Venue: Burrows Hall Community Center**
**1081 Progress Ave. Scarborough**

New Horizons for Seniors Program

Funded by the Government of Canada's New Horizons for Seniors Program

Canada

## Helpful contacts for Seniors

**Government of Ontario**

1. **Emergency Management Ontario**

Be prepared for an emergency

**Toll-free: 1-800-366-0335**

2. **Health811**

Get confidential health advice and general health information. This service is available 24 hours a day, 7 days a week in multiple languages.

**Chat online**

**Tel: 8-1-1**

**Toll-free TTY: 1-866-797-0007**

3. **Ontario Health at Home**

Learn more about home and community care options in your community.

**Tel: 310-2222 (no area code needed)**

4. **Pension programs**

Contact Service Canada about the Canada Pension Plan, Old Age Security, retirement and survivor allowances.

**Toll-free: 1-800-277-9914**
**Toll-free TTY: 1-800-255-4786**

5. **211 Ontario**

Get information about community supports and social services in your area. Services are free, confidential and available 24 hours a day, 7 days a week in more than 150 languages.

**Tel: 2-1-1**






## Welcome New Members

| | |
|---|---|
| 4074 | Suseela Ramachandran |
| 4075 | Maheswaran Sivagnansundaram |
| 4076 | Sakunthala Maheswaran |
| 4077 | Thangeswary Sivasothinathan |
| 4078 | Nirmala Sivagnansundaram |
| 4079 | Premarupa Uthayalingam |
| 4080 | Shantharupa Kirupanantham |
| 4081 | Saraswathy Sundareswaran |
| 4082 | Saraswathy Saravanabavananthan |
| 4083 | Pathmarani Rudrasingam |
| 4084 | Yoganathan Subramaniam |
| 4085 | Sarathadevy Kulasegarampillai |
| 4086 | Swarna Thambithurai |
| 4087 | Appathurai Vadivelu |
| 4088 | Nira Ponniah |
| 4089 | Devanathan Clifford |
| 4090 | Vijayalakshmi Umaibalan |
| 4091 | Devika Suresan |
| 4092 | Maryanne Joseph |
| 4093 | Thavaneswary Jeganathan |
| 4094 | Anushiya Elilvannan |
| 4095 | Thavamany Sivapalan |
| 4096 | Revathy Ganesamoorthy |
| 4097 | Jegadevi Loganathan |
| 4098 | Sakunthala Yogananthan |
| 4099 | Chellappa Murugananthan |

**The Senior Tamils' Centre deeply regrets to record the name of the following member who passed away in the recent past and condole with his family.**

Mr. Sabaratnam Subramaniam Mem 486 passed away on the 30th of April 2025.

**மகா அலெக்சாண்டரின் டைசி மூன்று ஆசைகள்:**

மகா அலெக்சாண்டர், பல நாடுகளை வென்று தனது நாட்டிற்குத் திரும்பியபோது, அவர் நோய்வாய்ப்பட்டார், அது அவரை மரணப் படுக்கைக்கு அழைத்துச் சென்றது. அவர் தனது தளபதிகளைக் கூட்டி, "நான் விரைவில் இவ்வுலகை விட்டுச் செல்கிறேன், எனக்கு மூன்று விருப்பங்கள் உள்ளன, தயவுசெய்து அவற்றைத் தவறாமல் நிறைவேற்றுங்கள்" என்று கூறினார். இந்த கடைசி விருப்பங்களுக்கு கட்டுப்படுமாறு ராஜா தனது தளபதியிடம் கேட்டார்:

1) "என் மருத்துவர்கள் மட்டுமே எனது சவப்பெட்டியை சுமக்க வேண்டும்" என்றார்.

2) "எனது சவப்பெட்டியை கல்லறைக்கு கொண்டு செல்லும் போது, நான் சேகரித்த செல்வங்களை எனது உடல் கல்லறைக்கு செல்லும் பாதையில் வரிசையாகவையுங்கள்" என்று கூறினார்.

3) "எனது மூன்றாவது மற்றும் கடைசி ஆசை என்னவென்றால், எனது இரண்டு கைகளும் என் சவப்பெட்டிக்கு வெளிய தொங்கவிடப்பட வேண்டும்" என்று அலெக்சாண்டர் கூறினார்.

தளபதிகள் தங்கள் மன்னரின் கடைசி விருப்பத்திற்கு இணங்க ஒப்புக்கொண்டனர் மற்றும் அவ்வாறு செய்வதற்கான காரணத்தை அவரிடம் கேட்டனர்.

அலெக்சாண்டர் கூறினார், "நான் கற்றுக்கொண்ட மூன்று பாடங்களை உலகம் அறிய விரும்புகிறேன்..."

1."எனது சவப்பெட்டியை என் மருத்துவர்கள் எடுத்துச் செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஏனென்றால் இந்த பூமியில் எந்த மருத்துவரும் எல்லா நோய்களையும் குணப்படுத்த முடியாது என்பதை மக்கள் உணர வேண்டும். அவர்கள் மரணத்தின் முன் தோற்றுப் போவார்கள்....

2. தனது இரண்டாவது விருப்பத்தை விவரித்தார்: "நான் என் வாழ்நாள் முழுவதும் செல்வத்தை சம்பாதிப்பதற்காக செலவிட்டேன், ஆனால் என்னுடன் எதையும் கொண்டு செல்ல முடியாது... என்பதை மக்கள் அறியட்டும்"

3. மூன்றாவதாக, "நான் இந்த உலகத்திற்கு வெறுங்கையுடன் வந்தேன், நான் வெறுங்கையுடன் செல்கிறேன்...என்பதை மக்கள் அறிய விரும்புகிறேன் என்றார்.

.□ தவறுகளை பயப்படாதீர்கள் - அவை சிறந்த ஆசிரியர்கள்.
வாழ்க்கையில் நாம் செய்யும் தவறுகள் நம்மை இன்னும் புத்திசாலியாக மாற்றுகின்றன. ஒவ்வொரு தோல்வியிலும் ஒரு பாடம் உள்ளது. அதை ஏற்றுக்கொண்டு முன்னேறுங்கள்.










**2 Days of fun, food, games, shopping etc. for the Ladies of STC at Barrie-Ontario…**

**25th & 26th March 2025**

முடியாது என்பது.!! முற்றுப்புள்ளி.!! முடியும் என்பது.!! வெற்றிப்புள்ளி

நிறைய காயங்களுக்கு பிறகுதான் கனவுகளெல்லாம் நனவாகும்.

இருளாக வாழ்க்கை என்றுமே இருந்து விடுமோ என்று கவலை கொள்ளாதே கனவுகள் முளைப்பது இருளில் தான்.

சாதிக்கும் எண்ணம் ஆழ்மனதில் தோன்றி விட்டால். எது இருந்தாலும் இல்லை என்றாலும் சாதிக்க முடியும். உன் விடா முயற்சியால்.

எந்த இடத்தில் இருக்கின்றோம் என்ன செய்து கொண்டு இருக்கின்றோம் என்பது முக்கியமில்லை எங்கு இருந்தாலும் சந்தோஷமாக இருக்கின்றோமா என்பது தான் முக்கியம்.

பாதை இல்லாத போதும் உன் பாதங்களை பதிய வை…! புதிய பாதை ஆகட்டும்…


SENIOR TAMILS' CENTRE OF ONTARIO
Canada Day
LET'S CELEBRATE
JULY 1
CANADA DAY CELEBRATIONS 2025
Date: 1 July 2025 Time: 10am
Venue: Neilson Park,
1555 Neilson Road , Scarborough ON
Happy CANADA Day!
LET'S Sing
SNACKS
& Refreshments
ACTION
FUN & GAMES


Day trip to Darlington Provincial Park
$45
Date: Friday, July 11th 2025
Transport: School bus
Get ready for an unforgettable adventure! An exciting trip to Darlington Provincial Park, with a long sandy beach on Lake Ontario, fun outdoor activities, snacks etc.
Last date for registration with full payment: June 20th 2025 (To avoid disappointment please reserve your seat முழு கட்டணத்துடன் பதிவு செய்யும் கடைசி நாள்; ஜூன் 20
Lunch Provided
SENIOR TAMILS' CENTRE OF ONTARIO


SUMMER PICNIC AT NEILSON PARK
Date: Wednesday, July 23rd 2025
Time: 10am-3pm
Venue: Neilson Park
1555 Neilson Road
Summer Picnic
FUN FOR EVERYONE!
Let's have FUN!
யாழ்பாணத்து
ஒடியல் கூழ்
Please obtain your tickets from the STC office
TICKET
$25
SENIOR TAMILS' CENTRE OF ONTARIO

# ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்
## SENIOR TAMILS' CENTRE OF ONTARIO

Registered Non- Profit Corporation # 923023
3852 Finch Ave. E, Unit 210, Scarborough ON M1T 3T9

Tel: 416-496-2897 /416-496-8850 Email: admin@seniortamilscentre.org

Website: www.seniortamilscentre.com

President
Manuel Jesudasan
647-501-6293

Vice President
Raj Thavaratnasingham
416-522-9972

Secretary
Gnana Sundaraiswaran
647-449-0343

Treasurer
S. Pathmanathan
647-385-3180

Directors

Kumarakulasunderam
Ponnudurai
647-984-8636

Arumugam Senthilvadivel
416-616-6031

Anjuthamalar Jegatheeswaran
416-931-9253

R. Mahendran
647-295-1010

K. Thanabalasingam
647-961-8010

S. Rajendra
647-828-2415

Editor/Director
Rathimathi Sabanathan
416-755-1853

Executive Director
Vasanthy Shanthakumar
647-238-0503



**Trip to Argentina/Brazil 28th April---10th May 2025**



